முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

பி. வா.சா. 1 தேதி.23.04.2024

| OS.No. | 405/2019 | | |
|---|---|---|---|
| பெயர் | வசந்தி | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

வழக்கு காசோலை, கடனுறுதிசீட்டு ஆகியவை எனது கணவர் செந்தில் வாதியின் மனைவிக்கு கொடுத்தார் என்பது தான் எனது வழக்கு என்றால் சரிதான். எனது கணவருக்கும் ராஜகுமாரிக்கும் கொடுக்கல் வாங்கல் எந்த வருடம் தீர்ந்தது என்றால் 2016ம் ஆண்டு ஜீன் மாதம் முடிந்தது. இந்த நிலையில் இவ்வழக்கு தாக்கல் செய்யும் முன்னர் வரையில் நான் வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை ஆனால் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம். வழக்கு கடனுறுதிச்சீட்டு மற்றும் காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது தானே என்றால் இல்லை. என்னுடைய வழக்கறிஞரின் பதில் அறிவிப்பு, பதிலுரை, நிரூபன வாக்குமூலத்தில் ஆகியவற்றில் கையெழுத்தை மறுத்து குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு குறிப்பிட்டு சொல்லாமல் தற்சமயம் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு தற்சமயம் இந்த கையெழுத்துக்களை மறுப்பதற்கு என்ன காரணம் என்றால் நான், திராவிடச் செல்வி மற்றும் செந்தில் ஆகியோரை ஒன்றுகூடி புரோநோட்டு சாட்சிகளான காமராஜ், ஸ்ரீதர் ஆகியோரை எங்கள் வசம் வைத்துக் கொண்டு முதல் முறையாக இந்த வாதத்தை எடுத்து கையொப்பத்தை மறுத்து முன் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு காசோலையை வசூலாக்காமல் நிறுத்தி வைக்க கேட்டு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. எனது வழக்கறிஞர் மூலமாக வழக்கு ஆவணங்கள் பற்றி நான் தெரிந்து கொண்டேன். வழக்கு காசோலையின் கையெழுத்து மாறுபாடாக உள்ளதால் வங்கியால் திருப்பப்படவில்லை என்றும் பணம் போதுமானதாக இல்லை என்று தான் திருப்பப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் வாதியின் வசம் வழக்குரையில் சொல்லியுள்ளது போல் கடன் பெற்றுக்கொண்டு அதற்காக காசோலையும் கொடுத்துள்ளேன் என்றும், தற்போது அந்த கடனை திரும்ப தரக்கூடாது என்ற எண்ணத்தில் தவறான சங்கதிகளை முன்வைத்து கையெழுத்தை மறுத்து முன்னுக்கு பின் முரணான

வாதங்களை முன்வைத்து கட்சியாடுகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய படி அவருக்கு வழக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. என் மீதும், திராவிடச்செல்வி மற்றும் செந்தில் மீது ஜெயப்பிரியா சிட் பண்ட்ஸ் நிறுவனத்திலும், ஸ்ரீராம் பைனான்ஸ் ஆகியவற்றில் பணம் பெற்று திரும்ப தரவில்லை என்பதற்காக நிறைவேற்று மனு நிலுவையில் உள்ளதா என்றால் ஸ்ரீராம் பைனான்ஸில் எனது கணவர் பணம் பெற்ற தான் இந்த கடனை அடைந்தார் என்பதால் அந்த கடன் மட்டும் உள்ளது. நாங்களும் திராவிடச் செல்வி மற்றும் செந்தில் ஆகிய மூவரும் ஒன்று கூடி காசோலை மற்றும் கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்து பணம் பெற்று பின் அதனை மறுத்து பணம் கொடுக்காமல் ஏமாற்றி கட்சியாடுவதை வாடிக்கையாக கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. விசாரணை முடிந்தது.